# மாலை முரசு

## ஓட்டோ விபத்தில் இருவர் மரணம்!

மாத்தளை, நாராங்கமுவ பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் குழந்தை உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று 02▶

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 24 புதன்கிழமை 08.01.2025 | அதிர்வு 160

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ஊடகர் லசந்தவின் படுகொலைக்கு இப்போதாவது நீதியை நிலைநாட்டுங்கள்

## நாடாளுமன்றில் அரசிடம் சஜித் வேண்டுகோள்

“சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 16 வருடங்கள் ஆகின்றன. இப்போதாவது உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்டுங்கள்.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், 02▶

# தேராவில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை இராணுவத்தினரிடமிருந்து மீட்டுத் தாருங்கள்!

## ஜனாதிபதியை வலியுறுத்திக் கையெழுத்துப் போராட்டம்





முல்லைத்தீவு மாவட்டம், விசுவமடு – தேராவில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து மாவீரர் தின நினைவேந்தலைச் சுதந்திரமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி கையெழுத்துப் போராட்டம் இன்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

தேராவில் மாவீரர் துயிலும் 02▶

# அரச சேவையில் மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் அனைத்து அரச பணியாளர்களும் செயலாற்ற வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து



"அரச சேவையில் மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் செயலாற்ற வேண்டும். அரச பணியாளர்களை அதற்குத் தயார்படுத்தும் வகையில் ஐரெக் திட்டத்தின் ஊடான பயிற்சிகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண அரசசேவை பட்டதாரிகள் சங்கத்தின் கோரிக்கையின்பேரில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்துக்கு – ஐரெக் விண்ணப்பிக்கும் முறைமை தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் யாழ்ப்பாணம் கலாசாரநிலையத்தில்நேற்றுசெவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் தனது உரையில்,

"அரச பணியாளர்களின் சேவைகளை மேம்படுத்துவதற்கு பயிற்சிகள் அவசியமாகின்றன. காலத்துக்கு காலம் அரச பணியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதும் இதற்குத்தான். எமது மாகாணத்தைச் சேர்ந்த அலுவலர்கள் ஐரெக் ஊடான பயிற்சிக்கு விண்ணப்பிப்பது குறைவாக இருந்ததாக துணைத்தூதுவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார். இம்முறை அதை அதிகமாக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

வடக்கு மாகாண சபைக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்துக்கும் இடையிலான உறவு நெருக்கமானது. அவர்கள் இவ்வாறான பயிற்சிகளை மாத்திரமல்ல எமது மாகாணத்துக்கு பல்வேறு உதவிகளையும் செய்திருக்கின்றார்கள். குறிப்பாக இன்றும் இந்திய வீட்டுத் திட்டம் என்று அவர்களால் எங்கள் மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை அழைக்கின்றோம். அது எமது மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய கொடை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டுவதைப்போன்று மக்களின் நம்பிக்கையை அரச சேவையாளர்கள் வென்றெடுக்க வேண்டும். அதற்கு இவ்வாறான பயிற்சிகளை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்." – என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத்தூதுவர் சிறிசாய் முரளியும் கலந்துகொண்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தேராவில் மாவீரர்....

இல்லப் பணிக் குழு உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையவர்கள் இணைந்து இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் காணியின் பெரும் பகுதி இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அந்த அபகரிக்கப்பட்ட துயிலும் இல்லக் காணிக்கு முன்பாகவே கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"நாட்டின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதி வழங்கியதைப் போன்று எங்களுடைய உறவுகளின் கல்லறைகள் இருக்கின்ற குறித்த காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்துத் தர வேண்டும்." – என்று மாவீரர்களின் உரித்துடையவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை வடக்கு மாகாண ஆளுநர் ஊடக ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்..

### ஓட்டோ விபத்தில்...

மஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

பல்லேபொலவிலிருந்து நாராங்கமுவ நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது ஓட்டோவின் சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த வயோதிபரும் இரண்டு பெண்களும் குழந்தையும் படுகாயமடைந்துள்ள நிலையில் மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் வயோதிபரும் பெண்ணொருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

75 வயதுடைய வயோதிபரும், 65 வயதுடைய பெண்ணுமே உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஊடகர் லசந்தவின்...

"சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 16 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இந்தக் கொலைக்கான மூல காரணத்தையும், கொலைகாரர்களையும் இதுவரை எந்த அரசாலும் கண்டுபிடிக்க முடியாதுபோயுள்ளன. இந்த விவகாரத்தை அவரது மகள் அஹிம்சா விக்கிரமதுங்க ஐக்கிய நாடுகள் சபையிடம் எடுத்துச் சென்றுள்ளார்.

அத்துடன், சிரச ஊடக வலையமைப்பின் மீதான கொடூரத் தாக்குதல் இடம்பெற்றும் 16 வருடங்கள் கடந்துள்ளன. லசந்த விக்கிரமதுங்க மற்றும் இராஜமகேந்திரன் ஆகியோர் நீதி மற்றும் நியாயத்திற்காக முன் நின்றார்கள். லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்டுங்கள்." – என்றார்.

# மக்களுக்கு சரியான முறையில் சேவையாற்றாத அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை

## மன்னாரில் ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மக்களுக்கு சரியான முறையில் சேவை வழங்காத அரச உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நாம் பின் நிற்கப் போவதில்லை. எனவே அரச உத்தியோகத்தர்கள் மக்களுடன் அன்பாக நடந்து கொண்டு அவர்களுக்கு உரிய நேரத்தில் சிறப்பான முறையில் சேவையை வழங்க வேண்டும்.

இவ்வாறு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டை கட்டி எழுப்புவதற்காக மக்கள் எங்களுக்கு ஒரு ஆணையை வழங்கி இருக்கிறார்கள்.

அதை சரியான முறையில் முன்னெடுத்து, மக்களின் பிரச்சினைகளை விரைவில் தீர்க்க நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மன்னாரில் இடம்பெற்ற நில மோசடி, இட மோசடி தொடர்பில் எல்லாவற்றையும் நாம் அறிந்திருக்கிறோம். சம்பந்தப்பட்டவர்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரச்சினைகள் என்று பார்க்கும் இடத்தில், கடந்த 15 வருடங்களுக்கு மேற்பட்ட பிரச்சினைகளை ஒரே நாளில் தீர்த்து விட முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு இதனை எமது அரசு தீர்த்து வைக்கும்.

சிங்கள ,தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு இருக்கிறார்கள்.

அதை விட நாட்டின் பிரச்சினைகளை சுலபமாக தீர்த்து வைப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பும் எமக்கு தேவை.- என்றார்.



# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(நவாஸ்)

அட்டாளைச்சேனை சம்பு நகர் அல்-மினா வித்தியால மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை மண்டபத்தில் பாடசாலையின் உப அதிபர் அப்துல் ஹை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். றஸ்மி பிரதம அதிதியாகவும், பாடசாலையின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் மௌலவி என்.ரி. நஸீர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

வெள்ள அனர்த்த பாதிப்பு திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங் கள் மற்றும் புத்தகப் பைகள் என்பன அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அகில இலங்கை வை. எம்.சி.ஏ.பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் அதிபர் எம்.ஐ.எம். றியாஸ், கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டப் பணிப்பாளர் நஸீர் காமில் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.








# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு!

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 50 குடும்பங்களுக்கு நளிர் பவுண்டேசன் அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க அமெரிக்கா சக்காத் பவுண்டேசன் அமைப்பால் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

நளீர் பௌன்டேசன் அமைப்பின் ஸ்தாபக தலைவர் எம்.ஏ.நளரின் அயராத முயற்சியின் பலனாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உதவிகளை செய்ய வேண்டும் என்று பல அமைப்புக்களின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருகின்றார்.









இதன் அடிப்படையில் அமெரிக்கா சக்காத் பவுண்டேசன் அமைப்பிடம் வேண்டுகோள் விடுத்ததற்கு அமைய அதன் செயலாளர் பஸாஹுல் ரஹ்மானினால் சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவு பொதிகள் மத்திய முகாம் 3 ஆம் வட்டார பல்தேவைக் கட்டட வளாகத்தில் வைத்து பொது மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.





Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ட்ரூடோவுக்கு நன்றி

கனடா நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகுகின்றார். தமது முடிவை அவர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். கனடா நாட்டில் விரைவில் இடம்பெறக் கூடிய பொதுத் தேர்தலோடு பெரும் அரசியல் மாற்றங்கள்- தலைகீழ் மாற்றங்கள் - வரக் கூடிய ஏதுநிலைகள் தென்படுகின்றன.

புலம்பெயர் ஈழத் தமிழர் சமூகத்தின் பெரும் எண்ணிக்கையாளர் கனடா மண்ணில் வசிக்கின்றனர் கனடாவில் ஈழத் தமிழர்களின் வாழ்வியலில் குறிப்பிடத்தக்க அரசியல் தலைவராக மிளிர்ந்தவர் ட்ரூடோ.

கனடா அரசியலில் கடந்த பத்தாண்டு காலம் கோலோச்சிய அவரது ஆட்சி இப்போது செல்வாக்கு இழக்கும் நிலையை எட்டி இருக்கலாம். அதன் காரணமாக அவர் பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால், கனடாவில் வசிக்கும் தமிழர்களினதும், தாயகத்தில் வசிக்கும் தமிழர்களினதும் வாழ்வியலில் அவரது பதவியிழப்பு காத்திரமான தாக்கத்தைத் தரக்கூடியது.

கனடாவில் ஈழத் தமிழர் சமூகமும் சேர்ந்து உருவாக்கிய ஒரு பிரதமராக அவர் பார்க்கப்படுகின்றார். அவரது ஆட்சியின் கீழ் கனடாவில் ஈழத் தமிழர்கள் நன்கு அரவணைக்கப்பட்டார்கள். ஈழத் தமிழர்களுக்காக முக்கிய தீர்மானங்களை - முடிவுகளை - அவர் எடுத்தார். செயற்படுத்தினார்.

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு முன்னெடுக்கப்பட்டது இனப்படுகொலையே என்று தீர்மானத்தை அவர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றச் செய்தார். தமிழர் மரபுத் திங்கள் கனடாவில் கொண்டுவரப்பட்டது. அதில் முழு ஈடுபாட்டுடன் தாமும் பங்குபற்றுவதை வழக்கப்படுத்திக் கொண்டார். தமிழ் சமூக மையத்துக்கான பெரும் நிதியை பெற்றுக் கொடுத்தார். ஆளும் கட்சியில் முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரை உருவாக்கினார். அமைச்சரவையில் இடம் கொடுத்தார். இலங்கையில் இனப்படுகொலையாளிகள் என்று அடையாளப்படுத் தப்பட்டவர்களுக்கு பயணத் தடையை விதிக்கக் காரணமானார்.

அவை எல்லாவற்றையும் தாண்டி, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் தொடர்ச்சியாக இடம் பிடிப்பதற்கும், இலங்கை தொடர்பான தீர்மானம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதற்கும் முன்னணியில் நின்று செயல்படும் நாடாக கனடா இன்று விளங்குகின்றது. அந்த நிலையில் உறுதியாகவும் தெளிவாகவும் கனடா செயல்படுவதற்கான வழி நடத்தலை அவரே முன்னின்று வழங்கினார்.

கனடாவில் தமிழ் சமூகம் அவரது பத்தாண்டு கால ஆட்சி வழிகாட்டலில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்திருக்கின்றது.

தமிழின பாதுகாப்புக்காக அர்ப்பணிப்போடும் தைரியத்தோடும் வெளிப்படையாகவும் செயல்பட்ட முக்கிய உலகத் தலைவர்களில் ஒருவராக அவர் ஈழத் தமிழர்களினால் என்றும் மதிக்கப்படுவார்.

ஈழத் தமிழர்களையும் சேர்த்து அரவணைத்த அவரது பண்பியல்பு, அந்நியர்களை அதிகம் நாட்டுக்குள் வந்து குடியேற அரவணைத்தார் என அவரது அரசியல் எதிரிகளால் இன்று சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்குள் அடங்குவதும் கவனிக்கத்தக்கது.

ஈழத் தமிழர்களுக்காக உறுதியுடனும் தெளிவுடன் பணியாற்றிய அவருக்கு என்றும் ஈழத் தமிழினம் நன்றியாகவே இருக்கும்.

புதிய தலைமையில் - அல்லது வரக் கூடிய புதிய ஆட்சியில் - கனாடாவில் ஈழத் தமிழினம் தொடர்ந்தும் இது போல அரவணைக்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



# பாடசாலை மாணவர்களுக்கு உணவு தயாரிப்பவர்களுக்குக் கருத்தரங்கு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு தயாரிப்பவர்களுக்கான சுகாதார ஆலோசனை கருத்தரங்கு காரைதீவு சுகாதார வைத்திய அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வஸீரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டார்கள்.

இதன்போது உணவு பாதுகாப்பு தொடர்பான விளக்கங்களை பொது சுகாதார பரிசோதகர் எம்.எம். சப்னூஸ் வழங்கினார். அத்துடன் உணவு கையாளுபவர்களுக்கான மருத்துவ சான்றிதழும் இதன்போது வழங்கப்பட்டது.






# அமரர் அருட்பணி பஸ்ரியன் அடிகளாரின் 40 ஆவது நினைவேந்தல் வங்காலையில்

( வாஸ் கூஞ்ஞ)

யுத்த காலத்தில் மன்னார் மறை மாவட்டத்தில் அருட்பணியாளராக இருந்து பாதிப்படைந்த மக்களுக்குச் சேவையாற்றிக் கொண்டிருந்த அருட்பணியாளர் மேரி பஸ்ரியன் அடிகளார் சுட்டுக் கொல்லப்பட்ட 40 ஆவது நினைவேந்தல் வங்காலை புனித ஆனாள் பங்கு மக்களால் நினைவு கூறப்பட்டது.

1985 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் யுத்தம் உச்சம் கொண்டிருந்த கால கட்டத்தில் அமரர் அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மன்னார் மறை மாவட்டதின் வங்காலை பங்கு தளத்தில் பங்கு தந்தையாகக் கடமை புரிந்து கொண்டிருந்தார்.

அக்காலத்தில் யுத்தத்தில் மக்கள் உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிப்டையும்போது துணிச்சலுடன் யாவருக்கும் தனது பணிகளை முன்னெடுத்து வந்தார்.

இந்தச் செயற்பாட்டைப் பொறுக்க முடியாதவர்கள் 1985.01.06 ஆம் திகதி இரவு இவரின் பங்கு மனைக்குச் சென்று சுட்டுக் கொன்றனர்.

இந்த 40 ஆவது நினைவேந்தலை திங்கள்கிழமை (06) வங்காலை பங்கு மக்கள் மற்றும் ஆயர் உட்பட அருட்பணியாளர்கள் துறவியர்கள் நினைவு கூர்ந்தனர்.

காலையில் புனித ஆனாள் தேவாலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் அடிகளாரின் ஆன்மா சாந்திக்கான இரங்கல் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஆலய வளாகத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள அடிகளாரின் உருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டுத் தீபம் ஏற்றிவைக்கப்பட்டது.

அத்துடன் கலந்து கொண்ட யாவரும் அடிகளாரின் உருவச் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். பங்கு தந்தை லக்கோன்ஸ் அடிகளாரின் எற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பங்கு தந்தை, ஆயர் மற்றும் மாந்தை மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி யூட் குரூஸ் அடிகளார் ஆகியோரும் இரங்கல் உரைகளை நிகழ்த்தினர். இறுதியில் இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றது.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு குடை ஒன்று அறிமுகமாகிறது!



(மஸ்கெலியா)

தேயிலை கொழுந்து பறிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்குக் குடை ஒன்றை அறிமுகப்படுத்த ஹொரண தோட்ட கம்பனியின் கட்டுப்பாட்டில் உள்ள சாமிமலை ஸ்டோக்ஹோம் தோட்டத்தின் தோட்ட முகாமைத்துவ அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தேயிலை தொழிலில் ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்கள் வெயிலிலும் மழையிலும் தேயிலை கொய்து வருகின்றனர் என்று தோட்ட அத்தியட்சகர் நதீர குணசேகர தெரிவித்தார்.

தனது தோட்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜே. ரொட்ரிகோ மற்றும் இணைப் பணிப்பாளர் வசந்த குணவர்தன ஆகியோரின் கருத்தின் அடிப்படையில் தனது தோட்டத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் இணைந்து இந்தக் குடையை முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தியதாக தோட்ட அத்தியட்சகர் தெரிவித்தார்.



# மட்டக்களப்பு மக்களுக்கு முதலைகளால் அச்சுறுதல்

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை ஓய்ந்திருக்கின்ற நிலையில் கிராமியக் குளங்கள் மற்றும் ஆறுகளிலும் நீர் நிரம்பியுள்ளன. இந்த நிலையில் குறித்த நீர் நிலைகளில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பெருநிலப் பரப்புக்கு உட்பட்ட போரதீவு பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட வெல்லாவெளிக் குளத்தில் முதலைகள் அதிகம் நடமாடுகின்றன என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் குளத்தில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் அக் குளத்தைப் பயன்படுத்தும் விவசாயிகளும் மீன் பிடியில் ஈடுபடுபவர்களும், மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என தெரிவிக்கப் படுகின்றது.

போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகத்தின் முன்னால் அமைந்துள்ள வெல்லாவெளி குளத்தில் மாத்திரம் சுமார் 07 இற்கு மேற்பட்ட முதலைகள் காணப்படுகின்றன என்று பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் மட்டக்களப்பு வாவியிலிருந்து இவ்வாறு குளததுக்கு முதலைகள் வந்திருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த குளம் மக்கள் குடியிருப்பை அண்மித்துள்ளால் பொது மக்களும், இரவு வேளைகளில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்

அத்தோடு மட்டக்களப்பு நகர் பகுதியில் உள்ள வாவியில் புளியந்தீவு பகுதியில் சஞ்சரித்து வாவியோரங்களில் மேய்ச்சலில் ஈடுபடும் ஆடு, மாடு போன்ற பெறுமதிமிக்க கால்நடைகளை வேட்டையாடிவந்த சுமார் 20 அடி நீளமுள்ள இராட்சத முதலை ஒன்றை அப்பகுதி மக்கள் பிடித்து வன ஜீவராஜிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# ‘பிஞ்சு மனம்’ சிறுகதை நூல் வெளியீடு!

வெலிகம, ரிம்ஸா முஹம்மத் எழுதிய ‘பிஞ்சு மனம்’ சிறுகதை நூல் வெளியீட்டு விழா, கொழும்பு, தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



# ‘தாராள உள்ளங்கள் அறக்கட்டளை’ புதிய அலுவலகம் திறந்து வைப்பு





(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ‘தாராள உள்ளங்கள் அறக்கட்டளை’ யின் புதிய அலுவலக திறப்புவிழா கல்முனை வாடி வீட்டு வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு அறக்கட்டளையின் தலைவர் ஜெ.ஜெயபிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக ஓய்வு பெற்ற அதிபர் எஸ். புனிதன் மற்றும் சிறப்பு அதிதியாக முன்னாள் கணக்காளர் கே.மகேஸ்வரன் மற்றும் உறுப்பினர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் மாணவர்களுக்கான மாதாந்த கல்வி உதவி திட்டங்கள் தொடங்கப்பட்டன. அத்துடன் நிர்வாக உறுப்பினரும் முன்னாள் அதிபருமான புனிதன் கௌரவிக்கப்பட்டார்.



# வர்த்தகத் துறையை மெருகேற்றுவதே தேசிய மக்கள் சக்தி அரசின் எதிர்பார்ப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

வர்த்தகத்துறையை மெருகேற்றுவதே தேசிய மக்கள் சக்தி அரசினுடைய எதிர்பார்ப்பு என்று நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரிப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களுடைய பிரச்சினைகளைப் பிரச்சினைகளாகவே வைத்திருக்கும் செயற்பாடே இதுவரை காலமும் நடந்தது.

மக்களுடைய பிரச்சினைகளை இயன்றளவு தீர்ப்பதே எமது குறிக்கோள். சில திட்டங்களை மக்கள் எதிர்த்தால் அது தொடர்பாக ஆராய்ந்தே அதனை செயற்படுத்த வேண்டும்.

சாவகச்சேரியில் புதிதாக கட்டப்பட்ட வர்த்தக நிலையங்களை குத்தகைக்கு வழங்கும் விடயத்தில் நகர சபையானது முறைகேடாக நடப்பதாக உள்ளூர்



வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இயன்றளவு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுப்போம். அத்துடன் சாவகச்சேரி நகரில் மேலும் கடைத்தொகுதிகளை அமைத்து வர்த்தகர்களுக்கு வழங்குவது தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்தாலோசிப்போம்.

கடந்த காலங்களைப் போன்று இன்று வடக்கில் வர்த்தக துறை நன்றாக இல்லை. பெயரளவில்தான் உள்ளது. வர்த்தகத் துறையை மெருகேற்றுவதே எமது அரசினுடைய எதிர்பார்ப்பு.

யுத்த காலத்துக்கு முன்பாக வடக்கில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை மற்றும் ஆனையிறவு உப்பளம் ஆகியன சிறந்த முறையில் இயங்கின.

அத்துடன் மீன்பிடி, விவசாயம் ஆகிய துறைகளும் வளர்ச்சி கண்டிருந்தன. அதனால் ஏற்றுமதி வியாபாரம் சிறப்பாக இருந்தது.

ஆனால் தற்போது யுத்தம் முடிவடைந்த போதிலும் எமது வர்த்தக நடவடிக்கைகள் மேலும் பின்னோக்கியே செல்கின்றன.

தென்மராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையம் வருடக் கணக்கில் மக்கள் பாவனை இன்றிக் காணப்படுகின்றது.

இவை மக்களுடைய வரிப்பணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள். இவற்றை அப்படியே விட்டுவிட முடியாது. கடந்த காலங்களில் அபிவிருத்தியை விட ஊழலுக்கு கொடுத்த முக்கியத்துவமே இவ்வாறான தவறுகள் இடம்பெறக் காரணம்.

நாம் மக்களுடைய கருத்துக்களையும் கேட்டு பிரச்சினைகளைத் தீர்த்து பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்போம்.– என்றார்.




# அனுமதி பத்திரம் இன்றி மணல் ஏற்றியவர் மல்வத்தையில் கைது!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ், பாறுக் ஷிஹான்)

அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக உழவு இயந்திரம் மூலமாக மணல் கடத்திய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்தோடு மணல் கடத்துவதற்கு பயன்படுத்தப் பட்ட உழவு இயந்திரத்தையும் சம்மாந்துறை பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினர் கைப்பற்றி யுள்ளனர்.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பி நாயகர் புரம், மல்வத்தை பகுதியில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்ட விரோதமாக மணல் ஏற்றியவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு மணல் ஏற்றப் பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரத்தையும் பறிமுதல் செய்துள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டனர்.

உழவு இயந்திரத்தை பொலிஸார் பரிசோதனை செய்த போது அனுமதிப் பத்திரம் இல்லாமல் மணல் ஏற்றியது தெரியவந்துள்ளது.

மல்வத்தை பகுதியைச் சேர்ந்த 28 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரே உழவு இயந்திரத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர், உழவு இயந்திரம் உள்ளிட்ட சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை பொலிஸ் நிலையபதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.ரணதுங்க தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான சார்ஜன் அநுர, சார்ஜன் அசோக்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்.




# றோட்டரி மாவட்ட ஆளுநர் திருகோணமலைக்கு விஜயம்

றோட்டரி இலங்கை மாவட்ட – 3220 ஆளு நர் சுசேனா ரணதுங்க திருகோண மலை றோட்டரிக் கழகத்துக்கு விஜயம் செய்தார். ஆளுநரின் செயலாளர் காமினி மடநாயகே, உதவி.ஆளுநர் பு. ஜெய பாலச்சந்திரன் ஆகியோரும் அவருடன் இணைந்து கொண்டனர்.

திருகோணமலை றோட்டரிக் கழகத் தின் தலைவர் ஜெகதீசன், ஆளுநர் மற்றும் அதிதிகளை வரவேற்றார். கிரேஸ் ஹோம் குழந்தைகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

செயலாளர் ரவிச்சந்திரன் 2024 வருட செயற்பாடுகள் பற்றி சுருக்கமான விளக்கத்தை அளித்தார்.

ஆளுநர் ஜெரோம் ராஜேந்திரம் திருகோணமலை றோட்டரி கழக நடவ டிக்கைககளைப் பாராட்டினார்.




# அகில இலங்கை சைவநெறிக் கழகம் நடத்தும் விஞ்ஞானபீட முன்னோடித் தேர்வு

சைவப்பெரியோர் சூரன்பெருமானா ரைப் போற்றும் வகையில், இலங்கை சைவநெறிக் கழகத்தின் கல்விப் பணிகளை நிர்வகிக்கும் குழுமத்துக்குச் சைவப்பெரியார் சூரன்பெருமானார் கல்விச் செயற்குழு என்று பெயரிடப்பட் டுள்ளது.

அந்தப் பெயரோடு நடத்தும் முதலா வது பணியாக விஞ்ஞானபீட முன்னோ டித் தேர்வு இடம்பெறவுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் இலங்கை சைவநெறிக் கழகத்தின் களுத்துறை மாவட்டப் பொறுப்பாளர் திருமதி. தம்பி ராஜா கோகிலாவின் மேற்பார்வையில் அரபொலகந்த பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் (11) சனிக் கிழமை காலை 9 மணிக்கு இந்தத் தேர்வு ஆரம்பமாகவுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதர விஞ்ஞான முன்னோடித் தேர்வுகள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் தொடர்ச் சியான பத்து விடுமுறை நாள்களுக்கு இடம்பெறும்.

இறுதியில் தேர்வெழுதிய மாணவர்க ளுக்கு ஆசிரியமாமணி திருமதி சசிமா இரவிக்குமார் ஆசிரியரால் விஞ்ஞானக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.




# டில்லி சட்டப்பேரவைக்கு பெப்ரவரி 5 ஆம் திகதி தேர்தல்

## 70 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக வாக்குப்பதிவு

டில்லி சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாக பெப்ரவரி 5 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஈரோடு கிழக்கு, உத்தர பிரதேசத்தின் மில்கிபூர் ஆகிய தொகுதிகளுக்கும் அதே நாளில்தான் இடைத்தேர்தல் நடைபெறுகிறது. பெப்ரவரி 8 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் டில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“டில்லி சட்டப்பேரவைக்கு மொத்தம் உள்ள 70 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக பெப்ரவரி 5 ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் ஜனவரி 10 ஆம் திகதி தொடங்குகிறது. வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கடைசி திகதி ஜனவரி 17. வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை ஜனவரி 18 ஆம் திகதி நடைபெறும். வேட்பு மனுக்களை திரும்ப பெறுவதற்கான கடைசி திகதி ஜனவரி 20 ஆகும். இதில் பதிவான வாக்குகள் பெப்ரவரி 8 ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்படும்.

டில்லி சட்டப்பேரவை தேர்தலில் மொத்தம் 1.55 கோடி பேர் வாக்களிக்க உள்ளனர். இதில், ஆண் வாக்காளர்கள் 83.49 லட்சம். பெண் வாக்காளர்கள் 71.74 லட்சம். இளம் வாக்காளர்கள் (20-29 வயது) 25.89 லட்சம், முதல் முறை வாக்காளர்கள் (18-19 வயது) 2.08 லட்சம் பேர் உள்ளனர். இந்தியாவின் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 99 கோடியை கடந்து 100 கோடியை நெருங்கியுள்ளது.

தங்கத்தின் தரம் போன்ற தேர்தல் முறைகளை கொண்டது இந்தியா. இது, நமது தேர்தல்களில் பொதுவான பாரம்பரியமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எனவே, ஆணையத்தில் எந்த முறைகேடுகளும் நடக்க வாய்ப்பில்லை. ஏனெனில் தேர்தல் நடைமுறைகள் அவ்வளவு புள்ளிவிவரத்துடன் உள்ளது. தனிப்பட்ட நபர்கள் தவறு செய்தால் தண்டிக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் குறைபாடுகள் மற்றும் நம்பகத்தன்மைக்கு எதிராக எந்த ஆதாரங்களும் இல்லை. செல்லாத வாக்குகள் என்ற கேள்விக்கும் இடமில்லை. அதேபோன்று மோசடி செய்வதும் சாத்தியமில்லை. இதனை, உச்ச நீதிமன்றமே தெளிவுபடுத்தியுள்ளது. பல்வேறு மாநில உயர் நீதிமன்றங்களும் இதே கருத்தையே தெரிவித்துள்ளன. எனவே, மீண்டும் வாக்குச் சீட்டு தேர்தல் முறைக்கு திரும்ப முடியாது. அதற்கான சாத்தியக்கூறுகளும் இல்லை. வெளிப்படைத்தன்மைதான் இந்திய தேர்தல் ஆணையத்தின் முக்கிய தூண்.” - என்றார்.

# அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தில் போராட்டம் நடத்தியவர்கள் மீது வழக்கு

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி துஷ்பிரயோக விவகாரத்துக்கு நீதி கேட்டு, அண்ணா பல்கலைக்கழகம் முன்பாக அ.தி.மு.க. மாணவரணி சார்பில் நேற்று முன்தினம் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட 100 இற்கும் மேற்பட்டவர்களை பொலிஸார் கைது செய்து அப்புறப்படுத்தினர். இதேபோல், தே.மு.தி.க. துணை பொதுச் செயலாளர் எல்.கே.சுதீஷ் தலைமையில் மதுரவாயலில் அக்கட்சியினர் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்நிலையில், போராட்டம் நடத்திய அ.தி.மு.கவினர் 161 பேர் மீது கோட்டூர்புரம் பொலிஸாரும், தே.மு.தி.கவினர் 115 பேர் மீது மதுரவாயல் பொலிஸாரும் வழக்குப் பதிந்துள்ளனர்.







# லொஸ் ஏஞ்சல்ஸில் அவசரகால நிலை!

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் ஏற்பட்டுள்ள பாரிய காட்டுத்தீ காரணமாக அங்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

20 ஏக்கர் வனப் பரப்பில் ஏற்பட்டிருந்த காட்டுத்தீ சுமார் ஒரு மணித்தியாலத்துக்குள் 1,200 ஏக்கர் வனப் பரப்பில் பரவியதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

30,000 இற்கும் மேற்பட்ட மக்கள் தங்களது இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

13,000 கட்டடங்கள் அச்சுறுத்தலின் கீழ் உள்ளதாக கலிபோர்னியா தீயணைப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அங்கு மணித்தியாலத்துக்கு 126 முதல் 160 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசுவதால் தீப்பரவல் வேகம் அதிகமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவில் மில்லியன் கணக்கான மக்கள் காட்டுத் தீப்பரவல் தொடர்பான சிவப்பு எச்சரிக்கையின் கீழ் உள்ளனர்.





# திபெத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழப்பு 125 ஆக அதிகரிப்பு

திபெத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின் காரணமாக 126 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த நிலநடுக்கம் இந்தியாவின் டில்லி, பிஹார் மாநிலங்களிலும் உணரப்பட்டது.

சீனாவின் ஒரு பகுதியாக உள்ள திபெத்தில், நேபாள எல்லைப் பகுதியையொட்டி நேற்று காலை 6.35 மணியளவில் சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. திபெத்தில் உள்ள மலைப்பகுதியில் சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கத்தின் மையப்புள்ளி இருந்தது.

இதனால் திபெத், நேபாள நாடுகள் நிலநடுக்கத்தில் குலுங்கின. இந்த பயங்கர நிலநடுக்கம் ரிக்டரில் 7.1 ஆக பதிவானது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. இந்த நிலநடுக்கம் திபெத்தின் ஜிசாங்க் பகுதியை மையமாகக் கொண்டு ஏற்பட்டதால் அப்பகுதியில் கடுமையான சேதம் ஏற்பட்டது. இங்கு வசிக்கும் மக்கள் கடும் பீதி அடைந்தனர். கட்டடங்கள் குலுங்கியதால் வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் தஞ்சம் புகுந்தனர்.

நிலநடுக்கம் காரணமாக திபெத்தின் ஷிகாட்சே நகரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீட்புப்படையினர் விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். இடிந்த வீடுகளில் சிக்கியவர்களை மீட்டனர்.

நிலநடுக்கத்தில் சிக்கி இதுவரை 126 பேர் உயிரிழந்துள்ளனர். 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர் என தகவல் வெளியானது. அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. பாதிப்பு அதிகமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. நிலநடுக்கம் காரணமாக திபெத்தில் 1,000 இற்கும் அதிகமான வீடுகளில் விரிசல் ஏற்பட்டன.

பிஹார், டில்லி, அசாம், மேற்கு வங்கம் உட்பட இந்தியாவின் பல பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டது. இந்தியா மட்டுமல்லாமல் நேபாளம், பூடான் ஆகிய நாடுகளிலும் நிலநடுக்கம் உணரப்பட்டு உள்ளது. இப்பகுதியில் வீடுகள் உள்ளிட்ட கட்டடங்களில் இருந்த மின்விசிறி, விளக்குகள் நிலநடுக்க பாதிப்பால் லேசாக அசைந்தன.

திபெத் நிலநடுக்கம் காரணமாக நேபாளத்தில் கடுமையான நில அதிர்வு ஏற்பட்டது. ஆனால் பெரிய அளவில் பாதிப்புகள் இல்லை என்று முதல் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடைசியாக நேபாளத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிக்டர் அளவுகோலில் 7.8 என பதிவானது. அந்த நிலநடுக்கத்தால் 9 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 03


# கனடா முரசு

புதன்கிழமை 08/01/2025

## வயோதிபர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் கொள்ளைகள்

கனடாவின் ரொறன்ரோவில் வயோதிபர்களை இலக்கு வைத்து கொள்ளை சம்பவங்கள் இடம் பெற்று வருவதாக தெரி விக்கப்படுகிறது.

இந்த கொள்ளை 02



# முடிவிற்கு வருகின்றது ஜஸ்டின் ட்ரூடோ அரசியல்

**தொடர்ந்து ஒன்பது வருடமாக நிலைத்துநின்ற பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.**

**எனினும் தனது சொந்த கட்சியினால் அழுத்தங்களிற்குள்ளாகியுள்ள பிரதமர் லிபரல் கட்சி புதிய தலைவரை தெரிவு செய்யும்வரை பதவியில் நீடிப்பேன் என அறிவித்துள்ளார்.**

**அடுத்த தேர்தலில் நாட்டிற்கு உண் மையான தெரிவு தேவைப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.**

அதேவேளை 2025 ஒக்டோபரில் கனடாவில் தேர்தல்கள் நடைபெற வுள்ள நிலையில், ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகினால் அது லிபரல் கட் சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கருத்துக்கணிப்புகள் லிபரல் கட்சி மோசமான தோல்வியை சந்திக்கும் என தெரிவி;த்துள்ளதாக ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது.

கருத்துக்கணிப்புகள் லிபரல் கட்சி தோல்வியடையும் என தெரிவிக்கின்ற சூழ்நிலையில் கட்;சியின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் பலர் பிரதமர் பதவி விலகவேண்டும் என வேண்டு கோள் விடுத்துவருகின்றனர்.

லிபரல் கட்சி மிக மோசமான நிலை யிலிருந்த காலத்தில் - நாடாளு மன்றத்தில் மூன்றாவது இடத்திலி ருந்த காலத்தில் 2103 இல் ட்ரூடோ கட்சியின் தலைமை பதவியை ஏற்றார். அதன் பின்னர் பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் ஜஸ்டின் ட்ரூடோ 2015 இல் லிபரல் கட்சியை வெற்றியை நோக்கி கொண்டு சென்றவர் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடிய தபால் திணைக்களம் முழு வீச்சில் இயங்குகின்றது



கனடிய தபால் திணைக்களம் முழு வீச்சில் இயங்க தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உரிய நேரத்தில் தபால்களை விநியோகம் செய்ய முடியும் என தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறிப்பாக பொதிகளை உரிய நேரத்தில் கொண்டு சேர்க்க முடியும் என அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும் கடிதங்கள், பட்டியல்கள் போன்றவற்றை விநியோகம் செய்வதில் சிறியளவிலான கால தாமதம் இருக்கும் என தெரிவித்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கனடிய தபால் திணைக்கள பணியாளர்கள் பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்தனர். இதன் காரணமாக சுமார் மூன்று வாரங்கள் வரையில் தபால் திணைக்களப் பணிகள் முடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கும் முயற்சியில் மீண்டும் டொனால்ட் ட்ரம்ப்

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகல் செய்த நேரம் பார்த்து கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கும் முயற்சியை மீண்டும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் பிரதமர் பதவியில் இருந்து ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகல் செய்வதாக நேற்று முன்தினம் அறிவித்தார்.

இந்நிலையில் நிலைமையை சாதகமாக பயன்படுத்தி ட்ரம்ப் ஒரு கருத்தை தெரிவித்துள்ளார். அதில், “கனடாவில் உள்ள பலர் தங்கள் நாடு அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இருப்பதை விரும்புகிறார்கள்.

கனடா அமெரிக்காவின் தயவில் தான் இருக்கிறது. நாம் அவர்களுக்கு நிதி உதவி கொடுக்கிறோம். நிறைய சலுகைகள் கொடுக்கிறோம். ஏற்றுமதி, இறக்குமதி வாய்ப்பு தருகிறோம்.


இனி அப்படி எல்லாம் வழங்க முடியாது. ஜஸ்டின் ட்ரூடோ இதை அறிந்திருந்தார், பதவி விலகல் செய்தார்.

கனடா அமெரிக்காவுடன் இணைந்தால், வரிகள் இருக்காது, வரிகள் வெகுவாகக் குறையும், மேலும் அவர்களைச் சுற்றி தொடர்ந்து இருக்கும் ரஷிய மற்றும் சீனக் கப்பல்களின் அச்சுறுத்தலிலிருந்து அவர்கள் முற்றிலும் பாதுகாப்பாக இருப்பார்கள்.

ஒன்றாகச் சேர்ந்தால், அது எவ்வளவு சிறந்த தேசமாக இருக்கும்.” என்று பதிவிட்டுள்ளார்.

சமீப காலமாகவே அமெரிக்காவுடன் கனடா இணைய வேண்டும் என்ற வாதத்தை ட்ரம்ப் முன்வைத்து வருகிறார்.

கடந்த நவம்பரில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் வென்ற ட்ரம்ப் வரும் ஜனவரி 20 ஆம் தேதி பதவி ஏற்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## வயோதிபர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இரண்டு ஆண்களும் மூன்று பெண்களும் இந்த கும்பலில் உள்ளடங்குகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

வயோதிபர்களை திசை திருப்பி அவர்களிடம் இருந்து பணம் மற்றும் பொருள்கள் கொள்ளையிடப்படுகின்றன என ரொறன்ரோ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடக்கம் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையில் இந்த கொள்ளை சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

வங்கிகள் மற்றும் கடைகளில் இந்த கொள்ளை சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பல்வேறு நுட்பங்களை பயன்படுத்தி முதியவர்களிடமிருந்து வங்கி அட்டைகளின் ரகசிய இலக்கங்கள் நுழைவுச் சொற்கள் போன்றவற்றை களவாடுதல், வங்கி அட்டைகளை களவாடுதல் அல்லது அவர்களுடைய பணப்பைகளை களவாடுதல் உள்ளிட்ட பல்வேறு குற்ற செயல்களுடன் இந்த ஐந்து பேரும் தொடர்பு பட்டுள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதிநவீன அலைபேசிகள் கைக்கடிகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக மொத்தமாக 96 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.



# கனடா பிரதமர் பதவி போட்டியில் அனிதா ஆனந்துக்கு வெற்றி வாய்ப்பு

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகல் அறிவிப்பைத் தொடர்ந்து, இந்திய வம்சாவளியை சேர்ந்தவரும், தமிழகத்தை பூர்விகமாகக் கொண்டவருமான அனிதா ஆனந்த், அந் நாட்டின் அடுத்த பிரதமராக பதவியேற்க வாய்ப்பிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

லிபரல் கட்சியின் புதிய தலைவரை தேர்வு செய்ய அந்தக் கட்சி முடிவு செய்திருக்கிறது. இது தொடர்பாக லிபரல் கட்சி தொண்டர்களிடையே விரைவில் வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. இதில் அதிக வாக்குகள் பெறுபவர் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவார். அவரே கனடாவின் புதிய பிரதமராகவும் பதவியேற்பார்.

இப்போதைய சூழலில் கனடா போக்குவரத்துத் துறை அமைச்சரும் லிபரல் கட்சியின் மூத்த தலைவருமான அனிதா ஆனந்த் முன்னணியில் உள்ளார். இவரது தந்தை ஆனந்த், தமிழகத்தை பூர்விகமாகக் கொண்டவர். தாய் சரோஜ் ராம் பஞ்சாபை சேர்ந்தவர் ஆவர்.

ட்ரூடோ பதவி விலகி நிலையில், அடுத்த கனடா அதிபர் ஆகும் போட்டியில் ஐந்து பேர் முன்னிலையில் உள்ளனர். அதில் தமிழகத்தை பூர்விகமாக கொண்ட அனிதா ஆனந்தும் உள்ளார். 57 வயதான அவர், தற்போது கனடாவின் போக்குவரத்துத் துறை அமைச்சராக உள்ளார். இதற்கு முன்பு பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் பணியாற்றி உள்ளார். கடந்த 2019 இல் அவர் அரசியலுக்கு வந்தார். அப்போது முதலே அவர் லிபரல் கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக உள்ளார்.

குயின்ஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் இளங்கலை முடித்துள்ளார். ஒக்ஸ்போர்டு மற்றும் டல்ஹவுசி பல்கலைக்கழகங்களில் இளங்கலை சட்டம் பயின்றவர்.



டொராண்டோ பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பில் முதுகலை பட்டம் பெற்றுள்ளார். நோவா ஸ்கோடியாவின் கென்ட்வில்லில் அவர் பிறந்தார். அவரது பெற்றோர் எஸ்.வி.ஆனந்த் - சரோஜ் டி. ராம் என இருவரும் மருத்துவர்கள். அவருக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர்.

அரசியல் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்புகளை வழங்கி உள்ளார். பொது சேவைத் துறை அமைச்சராக இருந்தபோது கொரோனா தடுப்பூசிகளை உறுதி செய்த செயலுக்காக மக்கள் மத்தியில் பாராட்டுகளை பெற்றவர். அவர் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த போதுதான் ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரில் உக்ரைனை ஆதரிப்பது என்ற முடிவை கனடா எடுத்தது.

அமைச்சரவை மாற்றத்தின்போது அவர் கருவூல வாரிய பொறுப்புக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் அமைச்சரவை அளவில் முக்கியஸ்தராக இருந்தார். கடந்த டிசம்பரில் போக்குவரத்து துறை அமைச்சராக பொறுப்பேற்றார்.

அதேபோல், இந்திய வம்சாவளியை சேர்ந்த லிபரல் கட்சியின் மூத்த தலைவர் ஜார்ஜ் சாஹலும் பிரதமர் பதவிக்கான போட்டியில் உள்ளார்.

இவர்கள் தவிர லிபரல் கட்சியின் மூத்த தலைவர்கள் மெலானி ஜோலி, கிறிஸ்டி கிளார்க், மார்க் கார்னி, கிறிஸ்டியா பிரீலேண்ட், டோமினிக் லீபிளாங்க் ஆகியோரும் பிரதமர் பதவிக்கு போட்டியிடுகின்றனர்.

எதிர்வரும் 27 ஆம் திகதி கனடா நாடாளுமன்றம் கூடுகிறது. அப்போது ஆளும் லிபரல் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர கன்சர்வேட்டிவ் கட்சி திட்டமிட்டு உள்ளது. இதன்படி எதிர்வரும் மார்ச் மாதம் கனடா நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும். இப்போதைய நிலையில் ஆளும் லிபரல் கட்சிக்கு பெரும்பான்மை இல்லை.

இதுகுறித்து அரசியல் நோக்கர்கள் கூறும்போது,

"நம்பிக்கை வாக்கெடுப்பில் லிபரல் கட்சியின் ஆட்சி கவிழுமா அல்லது அந்த கட்சி பெரும்பான்மையை நிரூபிக்குமா என்பதை துல்லியமாக கணிக்க முடியவில்லை. அரசு கவிழ்ந்து உடனடியாக நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்படலாம் அல்லது லிபரல் கட்சியின் புதிய பிரதமர் பதவியேற்று வரும் ஒக்டோபரில் நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்படலாம்." என்று தெரிவித்துள்ளனர்.